# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. இலங்கையிலிருந்து தமிழகம் முழுவதையும் ஆண்ட மன்னன்

அ) எல்லாளன் ஆ) சங்கிலியன் இ) குத்திகன் ஈ) இராவணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. பலாக்கனி என்ற சொல்லின் புணர்ச்சி

அ) தோன்றல் ஆ) திரிதல் இ) கெடுதல் ஈ) இயல்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. இலங்கையில் உள்ள மிகப்பெரிய தாழிக்காடு

அ) கந்தரோடை ஆ) மாந்தை
இ) கொக்காபே ஈ) பொம்பரிப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. மப்பன்றிக் காலமழை காணாத மண்ணிலே பாறை பிளந்து பயன் விளைவிப்பவன்

அ) மீனவன் ஆ) குயவன் இ) காவலன் ஈ) உழவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. படித்தனன் என்பதன் விகுதி

அ) படி ஆ) னன் இ) அன் ஈ) த்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. **தமிழர் பண்பாட்டுக்கழகம்** என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர்

அ) சி.வை. தாமோதரம்பிள்ளை ஆ) விபுலாநந்த அடிகள்

இ) தனிநாயகம் அடிகள் ஈ) இளங்கோ அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. இடைக்கற்காலத்தை ______________ எனக் கூறுவர்.

அ) பழையகற்காலம் ஆ) சிறுகற்காலம்

இ) பெருங்கற்காலம் ஈ) புதியகற்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. வாழ் + நாள் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) வாணாள் ஆ) வாழ்நாள் இ) வாண்நாள் ஈ) வாநாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. வெளிநாட்டவராலும் விதந்து போற்றப்படும் சிறப்பு நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) புறநானூறு இ) யாழ்நூல் ஈ) திருக்குறள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. **இராசராசசோழனால் தஞ்சைப்பெருங்கோவில் கட்டப்பட்டது.**

இச்சொல்லியத்தில் வந்துள்ள வேற்றுமை

அ) 1ஆம் வேற்றுமை ஆ) 5ஆம் வேற்றுமை

இ) 7ஆம் வேற்றுமை ஈ) 3ஆம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. தனிநாயகம் அடிகளார் பிறந்த இடம்

அ) கரம்பொன் ஆ) காரைதீவு இ) ஏழாலை ஈ) மட்டக்களப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. மகாவம்சம் ____________________ மொழியில் எழுதப்பட்டது.

அ) சிங்கள ஆ) தமிழ் இ) ஆங்கில ஈ) பாளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத்தொடர்

அ) திக்கித்திக்கி ஆ) செக்கச்சிவந்த இ) கணகண ஈ) பழக்கவழக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. சத்திமுற்றப் புலவர் தூதுவிட்ட பறவை

அ) கொக்கு ஆ) அன்னம் இ) நாரை ஈ) புறா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கி.பி 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரித்தானியாவைச் சேர்ந்த நாடக ஆசிரியர்

அ) கோமர் ஆ) வெர்சில் இ) சாவோ ஈ) சேக்ச்பியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. **"வெட்கப்படுகிறேனடா நான்"** என்று சங்கிலியன் கூறியது

அ) கதிர்காமநாயகத்துக்கு ஆ) வீடணனுக்கு

இ) எட்டப்பனுக்கு ஈ) வன்னியத்தேவனுக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. **நிறையுணவை உண்பது சாலச் சிறந்தது.**

இச்சொல்லியத்தில் வந்துள்ள உரிச்சொல்

அ) சால ஆ) நிறை இ) சிறந்தது ஈ) உணவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. அல்லும்பகலும் என்ற இணைமொழித்தொடர் குறிக்கும் பொருள்

அ) நாலாபக்கமும் ஆ) நன்றும்தீதும்

இ) நாள்முழுவதும் ஈ) பெருமுயற்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. **மீண்டும் தொடங்கும் மிடுக்கு** என்ற பாடலை எழுதியவர்

அ) பாரதியார் ஆ) மகாகவிஉருத்திரமூர்த்தி

இ) பாவேந்தர் ஈ) கண்ணதாசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. போர்த்துக்கேயர் இலங்கையில் முதன்முதலில் காலடி எடுத்துவைத்த ஆண்டு

அ) 1500 ஆ) 1510 இ) 1505 ஈ) 1520

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. **'புதியதொரு வீடு'** என்ற நாடகத்தில் கூறப்பட்ட தொழில்

அ) உழவுத்தொழில் ஆ) கடற்றொழில்

இ) கைத்தொழில் ஈ) நெசவுத்தொழில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. **த், ட், ற், இன்** என்பன

அ) பகுதிகள் ஆ) விகுதிகள்

இ) சாரியைகள் ஈ) இடைநிலைகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. **"அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு"** என்ற பழமொழியின் பொருள்

அ) அறிவின் அடக்கம் ஆ) வீண்பெருமை

இ) எல்லை கடத்தல் ஈ) சிறிதின் பெருமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. தனக்குப்பின் தன் ஆட்சி போர்த்துக்கேயருக்குச் சேர வேண்டும் என்று எழுதிக் கொடுத்தவன்

அ) மாயாதுன்னை ஆ) தர்மபாலா

இ) புவனேகபாகு ஈ) விசயபாகு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பின்வருவனவற்றுள் வல்லின மெய்யெழுத்து

அ) ங் ஆ) க் இ) ந் ஈ) ர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **குதிரை, யானை, தேர், காலாள்** என்பன

அ) நாற்படை ஆ) நாற்குணம் இ) நானிலம் ஈ) நாற்றிசை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. மகாவம்சம் சுட்டெரிக்கப்பட வேண்டியநூல் என்று கூறியவர்

அ) லயனல்சரத் ஆ) சிறிலால்கொடிகார

இ) ஈ.டபிள்யூ.அதிகாரம் ஈ) தர்மபாலா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. மலைபோன்ற தோள் என்ற உவமையணியின் பொதுத்தன்மை

அ) வலிமை ஆ) தோள் இ) மலை ஈ) மென்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. **கொறித்த** என்பது

அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம் இ) வினையடி ஈ) வினைமுற்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. கோவேத என்ற தமிழ்ப்பிராமிய எழுத்துப் பொறிக்கப்பட்ட முத்திரை கண்டெடுக்கப்பட்ட இடம்

அ) ஆனைக்கோட்டை ஆ) நல்லூர் இ) பூநகரி ஈ) கந்தரோடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஔவையார் என்ற பெண் புலவரைப்பற்றி அறியாதவர் யாரும் இல்லை. அவர் எழுதிய நூல்களில் ஒன்று ஆத்திசூடி. அதில் ஔவையார் அறஞ் செய விரும்பு என்று கூறியுள்ளார். அறஞ் செய் என்று கூறாமல் ஏன் ஔவையார் அறஞ்செய விரும்பு என்று கூறினார் எனப்பார்ப்போம். நமக்கு விருப்பமான ஒன்று வேண்டுமென்றால் அதற்காக நாம் நேரத்தையும் பணத்தையும் பார்க்காது அப்பொருள் கிடைக்கும் வரை தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருப்போம். நண்பர்களிடம் அப்பொருளைப்பற்றிப் பெருமையாகக் கூறுவோம். அப்பொருளைப்பற்றி மேலும்மேலும் ஆராய்வோம். நாம் விரும்பும் பொருள் எம் சிந்தைமுழுதும் நிறைந்திருக்கும். எமக்கு விருப்பமான வேலை செய்யும்பொழுது எமக்கு வெறுப்போ அல்லது களைப்போ தோன்றுவதில்லை. அவ்வேலையை எத்தனைமுறை வேண்டுமானாலும் அலுக்காமல் செய்வோம். அதனால்தான் ஔவையாரும் விருப்பம் இருந்தால் அவ்வேலையைக் கட்டாயம் செய்வார்கள் என்பதனாலும் ஒருவர் விரும்பினால் மட்டுமே அறஞ்செய்ய முடியும் என்பதனாலும் அறம்செய் என்று கட்டளை இடாமல் அறஞ் செய விரும்பு என்று கூறியுள்ளார்.

1. ஆத்திசூடி யாரால் எழுதப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

2. ஒருவரால் எப்போது அறஞ்செய்ய முடியும் எனக் கூறப்பட்டுள்ளது?

_______________________________________________

_______________________________________________

3. ஆத்திசூடியில் ஔவையார் என்ன கூறியுள்ளார்?

_______________________________________________

_______________________________________________

4. எப்பொழுது எமக்கு வெறுப்போ களைப்போ தோன்றுவதில்லை?

_______________________________________________

_______________________________________________

5. எமது சிந்தை முழுவதும் எது நிறைந்திருக்கும்?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. தனிநாயகம் அடிகளாரால் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடத்தப்பட்ட இடங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

2. போர்த்துக்கேயர் தமிழ்மண்ணில் காலூன்ற எடுத்த முயற்சிகளை முறியடித்த தமிழ் மன்னன் யார்? எங்கே முறியடித்தான்?

3. **"நீயும் நின் மனைவியும் தென்திசைக் குமரியாடி**

   **வடதிசைக் கேகுவீராயின்"** இப் பாடல் வரி யாரால்,

   எதைப்பார்த்துப் பாடப்பட்டது?

4. பெருங்கற்காலப் பண்பாட்டில் இறந்தோரை எவ்வாறு அடக்கம் செய்தனர்?

5. குறள் :- ***இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி***

   ***வேளாண்மை செய்தற் பொருட்டு***

   இக் குறளின் பொருளைத் தருக.

6. வீரத்தாய் தன் மகனை எவ்வாறு போருக்கு அனுப்பி வைத்தாள் எனப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

7. நாகதீபம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை முழுமை ஆக்குக.**

# வானம்பாடி

| | | | | |
|---|---|---|---|---|
| இருப்பாய் | யாழா | கொண்டே | மக்கள் | வெள்ளம் |

*வானூர்திமேலிருந்து வல்ல தமிழிசைஞன்*

*தானூதும் வேய்ங்குழலா ____________________*

*தனியொருத்தி வையத்து ____________________ மகிழ*

*குரல் எடுத்துப் பெய்த அமுதா*

*ஏந்தும் வான்வெள்ளத்தில்*

*இன்ப ____________________ தான் கலக்க*

*நீந்துகின்ற வானம்பாடியே - நீ*

*பாடிக் கொண்டே ____________________ - பசுந்தமிழர்*

*தேடிக் ____________________ இருப்பர்*

*தென் பாங்கை உன்பால்*

புள்ளிகள் 10

## 5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அ. சுட்டெழுத்துகள் எத்தனை?

______________________________

ஆ. அவை எவை?

______________________________

2. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

இயற்சொல் :- ______________________________

திசைச்சொல் :- ______________________________

3. கீழே தரப்பட்டுள்ள மரபுத்தொடரின் பொருள் விளங்குமாறு சொல்லியம் எழுதுக.

மணிமணியாக :- ______________________________

______________________________

கண்ணுங்கருத்தும்:- ______________________________

______________________________

மொழுமொழு :- ______________________________

______________________________

4. சொற்பொருள் தருக.

களிப்பு :- ______________ தாலம் :- ______________

காராளர் :- ______________ ஒறுப்பு :- ______________

படுகளம் :- ______________ தொன்மை:- ______________

5. **இருந்தனர்** என்ற சொல்லைப் பகுத்து எழுதுக.

______________________________

புள்ளிகள் 15

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Education is very impotant to everyone.In the olden days not everyone had the opportunity to have an education. But nowadays we have the great opportunity to get good education. So we must must make the best use of this opportunity and learn well. By continuing our education we will become knowledgeable people.

Uddannelse er en vigtig ting for alle. I gamle dage var det ikke alle, der havde mulighed for at uddanne sig. Men nu har vi flere muligheder for at uddanne os. Derfor skal vi udnytte disse muligheder og uddanne os. Når vi tillære flere ting, bliver vi også meget uddannede personer.

L'istruzione è molto importante per tutti noi. In passato non tutti hanno avuto l'opportunità di ricevere un'istruzione. Ma al giorno d'oggi noi abbiamo la grande opportunità di ricevere una buona istruzione. Quindi dobbiamo sfruttare questa opportunità ed imparare al meglio. Proseguendo con la nostra istruzione possiamo diventare delle persone competenti.

Studie is erg belangrijk voor iedereen. In het verleden had niet iedereen de kans om te studeren, maar nu hebben wij geweldige kansen om goed te studeren. Dus moeten wij deze kans erg goed gebruiken en goed leren. Door het doorstuderen zullen wij mensen zijn met veel kennis.

Utbildning är väldigt viktigt för alla. Förr i tiden hade alla inte möjligheten till en utbildning. Men nuförtiden har vi goda möjligheter att skaffa bra utbildning. Därför måste vi ta vara på denna möjlighet och lära oss väl. Genom att fortsätta att utbilda sig kommer vi bli väldigt kunskapsbesatta.

Utdanning er veldig viktig for alle. I gamle dager hadde ikke alle anledning til å ta utdanning. Men i våre dager har vi store muligheter til å få en god utdanning. Derfor må vi gjøre det beste ut av denne muligheten og utnytte den godt. Ved å fortsette med vår utdanning vil vi bli et kunnskapsrikt folk.

Die Bildung ist für alle sehr wichtig. In alten Zeiten hatten nicht alle die Möglichkeit auf eine gute Bildung. Aber zur heutigen Zeit haben wir alle große Möglichkeiten, um eine gute Bildung zu erhalten. Deshalb müssen wir alle Möglichkeit nutzen und gut lernen. Wenn wir weiterhin lernen, werden wir intelligente Menschen.

Les études sont très importantes pour tout le monde. Auparavant, tout le monde n'avait pas eu l'occasion de faire leurs études. Par contre, de nos jours, nous avons une bonne opportunité pour poursuivre nos études et saisir cette opportunité pour bien apprendre. En continuant à bien travailler, on sera très intelligent.

புள்ளிகள் 05

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

❋ **சாக வரம்பெற்ற சங்கிலிமன்னன்.**
இந் நாடகத்தைக் கதையாக எழுதுக.

❋ **வளி (காற்று)**
வளியின் அகத்தியம்.
வளிமாசுபடுத்தலுக்கான கரணியங்கள்.
அதைத்தடுப்பதற்கு நீர் கூறும் வழிகள்.

❋ **வாழிடக்கல்வியும் தமிழ்க்கல்வியும்**
இரண்டினதும் இன்றியமையாமை.

புள்ளிகள் 20